பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 134 நாள்: 24.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சியில், ரூ. 18.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 107 அம்மா உணவகங்கள் திறந்து வைக்கப்பட்டது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (24.09.2016) பெருநகர சென்னை மாநகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள 107 அம்மா உணவகங்கள் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழைகளின் ஏந்தலாய், பாமரர்களின் பாரிஜாதமாய், அன்னமிட்டகையாய், வயிற்றுக்கு சோறிடவேண்டும் இங்குவாழும் மனிதர்களுக்கெல்லாம் என்ற பாரதியாரின் கூற்றுபடி, நோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் வகையில், சத்தான உணவு வகைகளை ஏழை எளிய மக்கள் மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் அம்மா உணவகங்களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை எண்.21 நாள்.17.01.2013 ன்படி முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியிலுள்ள 15 மண்டலங்களுக்கு தலா ஒன்று வீதம் 15 அம்மா உணவகங்கள் கடந்த 19.02.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், கட்டிட தொழிலாளர்கள், பாரம் தூக்குபவர்கள், சென்னைக்கு பணி நிமித்தமாக வந்து செல்பவர்கள், குறைந்த ஊதியத்தில் பணியாற்றுபவர்கள் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வகைகளை மலிவு விலையில் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் உள்ள 200 கோட்டங்களில் 293 அம்மா உணவகங்களும், பொது மக்கள் அதிகமான பயன்படுத்தும் ஏழு அரசு மருத்துவமனைகளிலும் தலா ஒன்று விதம் 7 அம்மா உணவகங்கள் என மொத்தம் 300 அம்மா உணவகங்கள் பெருவாரியான பொது மக்களின் வரவேற்பினை பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதுவரை அம்மா உணவகங்களின் மூலம் 33.60 கோடி இட்லிகளும், 13.9 கோடி கலவைச் சாதங்களும் மற்றும் 17.38 கோடி சப்பாத்திகளும் பொது மக்களுக்கு மலிவு விலையில் சுகாதாரத்துடன் கூடிய தரமான உணவு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அனைத்து ஏழை எளிய பொதுமக்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காக மேலும் 107 அம்மா உணவகங்களை அமைத்திட உத்திரவிட்டார்கள். அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திருவொற்றியூர் மண்டலத்தில் 8 அம்மா உணவகங்களும், மணலி மண்டலத்தில் 2 அம்மா உணவகங்களும், மாதவரம் மண்டலத்தில் 6 அம்மா உணவகங்களும், தண்டையார்பேட்டை மண்டலத்தில் 8 அம்மா உணவகங்களும், இராயபுரம் மண்டலத்தில் 7 அம்மா உணவகங்களும், திரு.வி.க.நகர் மண்டலத்தில் 9 அம்மா உணவகங்களும், அம்பத்தூர் மண்டலத்தில் 6 அம்மா உணவகங்களும், அண்ணாநகர் மண்டலத்தில் 6 அம்மா உணவகங்களும், தேனாம்பேட்டை மண்டலத்தில் 4 அம்மா உணவகங்களும், கோடம்பாக்கம் மண்டலத்தில் 9 அம்மா உணவகங்களும், வளசரவாக்கம் மண்டலத்தில் 8 அம்மா உணவகங்களும், ஆலந்தூர் மண்டலத்தில் 9 அம்மா உணவகங்களும், அடையார் மண்டலத்தில் 10 அம்மா உணவகங்களும், பெருங்குடி மண்டலத்தில் 7 அம்மா உணவகங்களும், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் 8 அம்மா உணவகங்களும், என மொத்தம் 107 அம்மா உணவகங்கள் ரூ.18.99 கோடி மதிப்பீட்டில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முன்னோடித்திட்டமான ‘‘அம்மா உணவகம்’’ திட்டத்தின் சிறப்பை அறிந்து மற்ற மாநிலங்களான ராஜஸ்தான், கர்நாடகா, டெல்லி, குஜராத், ஆந்திர பிரதேஷ், மகாராஷ்ரா போன்ற மாநில அரசு பிரதிநிகள் மற்றும் எகிப்து நாட்டு அரசு பிரதிநிதிகள் ஆகியோரும் இங்கு வருகை புரிந்து பார்வையிட்டு ஏழை எளிய மக்கள் பசியினை போக்கும் இத்திட்டத்தினை வெகுவாக பாராட்டி தங்களது மாநிலங்களில் அம்மா உணவக திட்டத்தினை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், புதியதாக கட்டப்பட்டுள்ள 107 அம்மா உணவகங்களை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டிஜெயக்குமார் அவர்கள் மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப.,அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலஷ்மி இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவின்.பி.நாயர் இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.வெற்றிவேல் அவர்கள், திரு. பி. சத்தியநாராயணன் அவர்கள், திரு. வி. அலெக்சாண்டர் அவர்கள், ஆர்.நடராஜ் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**